

# ''பாவம் நித்யா என்ன செய்யும்....?''

## -சோகத்தில் கைகொடுத்த மணமகன்!

ஏ.எம்.சுதாகர்

பதினெட்டு பேர் உயிரைக் குடித்த சோக சம்பவம் தர்மபுரி மாவட்டத்தையே உலுக்கிப் போட்டிருந்தாலும் அதைத் தொடர்ந்து நடந்த சுப நிகழ்ச்சி அனைவரையும் நெகிழ வைத்திருக்கிறது.

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு தாலுக்கா, திருமல்வாடியைச் சேர்ந்த கணேசன், சுகந்தி தம்பதியினரின் மகள் நித்யாவிற்கும், பில்பருத்தியைச் சேர்ந்த மகேந்திரன் மகன் அருள் என்பவருக்கும் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டிருந்தது. சொந்த ஊரிலிருந்து திருமணத்திற்காக மணப்பெண் நித்யாவுடன் உற்றார், உறவினர் என 65 பேர் சரக்கு வண்டியில் மணமகன் ஊரான பில்பருத்திக்குப் புறப்பட்டனர். சிறிய வண்டியில் அவ்வளவு பேரை ஏற்ற இடமில்லாததால் பெரும்பாலான பெண்கள் சரக்கு வண்டியில் நின்றுகொண்டே வந்தனர். திருமண நிகழ்ச்சி என்பதால் அனைவரின் முகத்திலும் சந்தோஷக் களை தாண்டவமாடியது.

இந்நிலையில் கர்தாரப்பட்டி அருகே முன்னால் சென்ற டிராக்டரை முந்திச் செல்ல சரக்கு வண்டி முயன்றது. அவ்வளவுதான்... கண்ணிமைக்கும் நேரத்தில் அரங்கேறியது அந்தக் கோர விபத்து. எதிரில் வந்த லாரியின் மீது படுவேகமாக மோதியது கல்யாண கும்பலை ஏற்றி வந்த சரக்கு வண்டி. அதுவரை உற்சாகம் கரை புரண்டோடிய கும்பலின் மரண ஓலங்கள் விண்ணை அதிர வைத்தன. ஒரே கூச்சல் குழப்பம். ஆங்காங்கே ரத்த வெள்ளத்தில் துடித்தன உடல்கள். யார் எங்கே தூக்கி வீசப்பட்டு இருக்கிறார்கள் என்றே விளங்க முடியாத அளவுக்கு கும்மிருட்டு வேறு... மேலும் விபத்து நடந்த பகுதியில் வீடுகள் குறைவு என்பதால் உதவிக்கும் யாரும் வரவில்லை.

நல்ல வேளையாக சரக்கு வண்டியின் பின்னால் மினி லாரியில் மணமகளின் மற்ற உறவினர்கள் வந்தனர். அவர்கள் பதறியடித்துக் கொண்டு இறங்கி மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதற்குள் யாரோ போலீஸாருக்குத் தகவல் கொடுக்க எஸ்.பி. சுதாகர் தலைமையில் ஏராளமான போலீஸார் குவிக்கப்பட்டனர். தொடர்ந்து மாவட்ட கலெக்டர் அமுதாவும் சம்பவ இடத்தில் ஆஜராகி மீட்டுப் பணியைத் துரிதப்படுத்தினார். கிடைத்தவர்களை அள்ளிப் போட்டுக் கொண்டு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக விரைந்தனர். ஆனாலும் காலனின் அகோரப் பசிக்கு 18 பேர் பலியாகி இருந்தனர். அதிஷ்டவசமாக மணப்பெண் நித்யாவும், அவருடைய தாய், தந்தையரும் காயத்துடன் உயிர் பிழைத்தனர். பின்னர் மணப்பெண் கோலத்தில் அலங்காரம் செய்யப்பட்டிருந்த நித்யா 'இறந்த உறவினர்களைப் பார்த்தே தீருவேன்' என்று கதறி அழ, அவரை உடல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றனர். அவ்வளவுதான்... மணமகள் நித்யா உடைந்து போய் கண்ணீர் விட்டுக் கதறியது கனத்த இதயத்தையும் கரையச் செய்தது. நடக்க இருந்த திருமணமும் நின்று போனது.

பின்னர் போலீஸார் செய்த விசாரணையில் சரக்கு வண்டி டிரைவர் குமரவேல் குடிபோதையில் வாகனத்தை ஓட்டியது தெரிய வந்தது. அவர் கைது செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

